# நீர் வளச்சபை
# சுற்றாடல் அமைச்சு
# வெற்றிடம்

## நீர் வளச் சபையின் பொது முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம் - 2025

முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வெற்றிடமாகவுள்ள பொது முகாமையாளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொது முகாமையாளர் (HM 2-1)**

**தகைமை மற்றும் அனுபவம்** **வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட விஞ்ஞானம்/ பொறியியல்/ வியாபார நிர்வாகம்/ அரச நிர்வாகம் அல்லது விடயத் துறைக்கு இணையான வேறு ஏதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   விஞ்ஞானம்/ பொறியியல்/ வியாபார நிர்வாகம்/அரச நிர்வாகம் அல்லது விடயத் துறைக்கு இணையான வேறு ஏதாவது பட்டப் பின்படிப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகமய நிறுவனமொன்றில் தமது விடயப்பரப்பினுள் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 20 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானம்/ பொறியியல்/வியாபார நிர்வாகம்/ அரச நிர்வாகம் அல்லது விடயத் துறைக்கு இணையான வேறு ஏதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   விடயத் துறைக்கு இணையான கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகமய நிறுவனமொன்றில் தமது விடயப்பரப்பினுள் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 05 வருட காலம் முகாமைத்துவ அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

நீர் வளச் சபையில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பிரதிப் பொது முகாமையாளர் (HM 1-3) பதவியில் 2 வருடங்கள் திருப்திகாரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது உதவிப் பொது முகாமையாளர் (HM 1-1) பதவியில் 5 வருடங்கள் திருப்திகாரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

பல்வகை துறை குழுக்களுக்கு தலைமை தாங்குதல் மற்றும் செயற்படுத்தும் இயலுமையைப் பெற்றிருத்தல், மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை முறையான வகையில் மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்குத் தேவையான அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**வயதெல்லை** : வெளிவாரி விண்ணப்பதாரிகள் 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பொது நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரிகள் மேற்கூறிய தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
3. சம்பளம் வழங்குதல் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட MSD 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபம் ஏற்புடையதாகும்.
4. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி, தொழில்சார் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு அல்லது எரிபொருள் கொடுப்பனவு சகிதம் ஏனைய தொடர்பான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
5. அரசாங்கம்/ கூட்டுத்தாபனம் அல்லது சபைகளின் விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.
6. அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது சபைகளில் சேவையில் உள்ள அதிகாரிகள் குறித்த நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.
8. முழுமையான சுய விபரங்களுடனான விண்ணப்பப் படிவங்கள் சகிதம் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத இரு சான்றளிப்போரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதம் தலைவர், நீர் வளச் சபை, 488/A, நாவல வீதி, கொஸ்வத்த, ராஜகிரிய எனும் முகவரிக்கு 2025-08-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**தலைவர்,**
**நீர் வளச் சபை,**
**488/A, நாவல வீதி,**
**கொஸ்வத்த, ராஜகிரிய**